ளியீடு எண். 433.

பேரளம் - தல வரலாறு

கோயில் தோற்றம்

தருமபுர ஆதீனம்



தருமபுர ஆதீனம் 25-ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 433

உ

சிவமயம்

பேரளம் - தல வரலாறு

திருக்கயிலாய பரம்பரைத்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில்

29—1—59 குருவாரத்தன்று நிகழும்

மகா கும்பாபிஷேக வெளியீடு

அவ்வாலய பரம்பரைக் கர்த்தா

தருமபுர ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

அருளாணைப்படி வெளியிடப்பெற்றது

தருமபுர ஆதீனம்

29—1—59

1 - 3 pages missing in book

முறைகளும் திட்டம் செய்து வைத்துள்ளனர். இது போன்ற சிறந்த ஆலயங்கள் பல நம்முடைய தென்னுட்டில் நின்று காத்து வருகின்றன. ஆகவே தென்னுடு ஒரு தெய்வத்திரு நாடென்று சொல்லத்தகும். திருவுருவத் திருமேனி கொண்டு இறைவன் எழுந்தருளியிருக்கும் இத்தலங்கள்தோறும் நம் சமயாசாரியப் பெருமக்கள் அடியார்களோடு சென்று திருப்பதிகம் பாடி அருளினுர்கள். அவர்கள் வழிநடையில் சில தலங்களில் ஆண்டவனுக வலிந்து பாடல் பாடவும் வைத்தான். அத்தகைய பாடல்பெற்ற பதிகள் சோழ நாட்டில் காவிரிக்கரையில் மிகவும் அதிகம். பாடப் பெருத பதிகளும் சோழநாட்டில் பல உண்டு. சோழநாடு சோறுடைத்து என்பார்கள் ; சோறு ஊன் வளர்க்கும் உணவாகவும், உயிர் வளர்க்கும் முத்திப்பேருகவும் கொள்ளத்தகும். இதற்கு ஒரு ஸ்தலபுராணம் இருக்கிறது. இத்திருத்தலம் தருமையாதீனத்தின் 27 திருக்கோவில்களுள் ஒன்ருக மிளிர்கின்றது. மேற்கு நோக்கிய சந்நிதி, மிகவும் விசேஷம். சூரிய வழிபாடும் உண்டு.

இருக்குமிடம் :

தஞ்சை மாவட்டத்தில் உள்ள இத்தலம் மாயூரம் திருவாரூர் இருப்புப்பாதை யிடையில், மாயூரமிருந்து 10 கல்லும், திருவாரூரிலிருந்து 14 கல்லுமாகிய தோலையில் இருக்கிறது. மாயூரம் திருவாரூர் பேருந்துச் சாலை இவ்வூர் வழியே செல்கிறது.

தொன்மை :

மிகவும் பழைய தலம். திருக்கோவில் முழுதும் செங்கல் திருப்பணியாக இருப்பதும், வௌவால் நத்தி மண்டப அமைப்பும் தொன்மையை வெளிப்படுத்தும் வேலைப்பாடும் அதற்குச் சான்று பகரும்.

தலப்பெயர் :

கார்ஷஞ்ஜினி என்ற முனிவர் உலகத்திலுள்ள எல்லா இலிங்க மூர்த்தங்களுடைய நாமங்களையும் சொல்லி வழிபட விரும்பி இங்குத் தவமியற்றினார். இறைவன் அவர்க்குக் காட்சிநல்கி 'நீ பூசை செய்யும் பொழுது ஆலயத்தின் சுவரில் எல்லா இலிங்கங்களின் நாமங்களும் உன் கண்களுக்குத் தெரியும்; அதைக் கண்டு நம்மை வழிபடுவாயாக' என்று அருளினார். இவ்விதம் பெயர்களுக்கு இருப்பிடமாக இருந்தமையால் பேரளம் (பேர்+அளம்) என்று தலப்பெயர் வழங்குவ தாயிற்று. வடமொழித் தல புராணத்திலும் நாமாஸ்திக க்ஷேத்திரம் என்று உள்ளது. இந்தத் தலத்திற்கும், ஈசனுக்கும் நாமாஸ்திக என்ற பெயர் உண்டு. எல்லாத் தலங்களுடைய அருள் தன்மையும் இங்கு இருப்ப தாலும், எல்லா இலிங்க நாமங்களையும் கூறி வழிபட் டமையாலும், சமஷ்டி க்ஷேத்திரம் (எல்லாமானது) என்றும் பெயர். சிவலிங்கத் திருமேனி தானே தோன்றியமையால் சுயம்பு க்ஷேத்திரம் எனவும், முற் கூறிய முனிவர் பாடலி (பாதிரி) புஷ்பங்களால் பூசித் தமையால் பாடலி வன க்ஷேத்திரம் என்றும் பெயர் பெற்று விளங்குகிறது.

பேரள முனிவர் இத்தலத்தில் தவம் புரிந்தார். நெடுங்காலம் சுயம்புநாதரையும் பவானியம்பாளையும் வணங்கிக் காட்சி பேற்ருர். தம் பேயரால் இத்தலம் வழங்கப்பட வேண்டினர். அவ்வாறே இத்தலத்துக்கு இப்பேயர் வழங்கி வருகிறது.

மூர்த்தி :

சுயம்புலிங்கம். சிறிது வடக்கே சாய்ந்திருக்கிறது. எல்லா இலிங்கங்களும் இம்மூர்த்தியில் இருப்பதால் பாரத்தின் காரணமாக சாய்ந்திருப்பதாகப் புராணம் கூறும். அம்பிகையின் நாமம் பவானி. சுயம்புவேச்வரி என்றும் பேயர்.

தீர்த்தங்கள் :

அக்னி தீர்த்தம் :- இத்தீர்த்தம் ஆலயத்திற்குக் கீழ்பால் உள்ளது. இங்கு மதிய வேளையில் நீராடினல் காசியில் கங்கை - மணிகர்ணிகாக் கட்டத்தில் நீராடிய பலனும் ; சனிக்கிழமை, திரயோதசி, பிரதோஷத்தில் நீராடினல் அச்வமேதயாகம் முதலிய யாகங்களின் பலனும் கிடைக்கும்.

சந்திர தீர்த்தம் :- ஆலயத்திற்கு வடபால் உள்ள கிணறு இத்தீர்த்தம். இதில் அமிர்தகலைகள் நிரம்பி யிருப்பதால், பேளர்ணமியில் நீராடினல் மறுபிறப்பு இல்லை என்கிறது தலபுராணம்.

சூர்ய தீர்த்தம் :- சுயம்பு லிங்கத்திற்கு நிருதி (தேன்மேற்கு) திசையில் உள்ள கிணறு இத்தீர்த்தம்.

இதில் ஆவணி மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடு வதால் ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளையும், செல்வம் முதலிய எல்லாச் செல்வங்களையும் பெற்று நல்வாழ்வுறலாம் என்று தல புராணத்தில் கூறப் பெற்றுள்ளது.

தலப்பெருமை :

இது சமஷ்டி க்ஷேத்திரம். ஆதலால் இங்கு வழி படுதல் எல்லா க்ஷேத்தீர வழிபாட்டின் பயனையும் அளிக்கவல்லது. காசி க்ஷேத்திரத்தைக் காட்டிலும் பலமடங்கு பெருமை வாய்ந்தது. வடநாட்டில் கேதார நாதனுடைய திருநாமத்தைச் சொல்லிப் பிணிகளி னின்றும் விடுபடுவதுபோல, இந்த க்ஷேத்திரத்தில் ஒரு முறத்தில் திருநீற்றைத் தெளித்து பவானி வல்லபன், நாமாஸ்திகேசன், ஸ்வயம்புநாதன் என்ற பெயர்களை எழுதி "கேதார" என்று ஜபித்து நோயாளிக்கு அளித் தால் எல்லா ஜுரங்களும் நீங்கும்.

வழிபட்டவர்கள் :

இந்திரன், சூரியன் முதலிய தேவர்களும், கார் ஷஞ்ஜினி முனிவரும், வழிபட்டனர். தந்தையின் சொல்லைக் காக்கத் தம்பியுடனும், மனைவியுடனும் வனவாசம் செய்த இராமபிரான், வனவாசம் செய்த எட்டாம் ஆண்டில் இத்தலத்திற்கு வந்து தந்தைக்குச் சிரார்த்தம் முதலியன செய்தார். இராமபிரான் அளித்த பிண்டங்களைத் தசரதர் நேரில் வந்து பெற்றுக்கொண் டனர். அவர் மூலமாக இத்தலத்தின் பெருமையை

இராமபிரான் அறிந்து இத்தலத்துப் பெருமானுகிய சுயம்புநாதரை வழிபட்டார்.

புராணம் :

சைவ மகாபுராணம் கோடி ருத்ர ஸம்ஹிதையில் க்ஷேத்திர வைபவ காண்டத்தில் 303 to 308 முடிய ஆறு அத்தியாயங்களில் இந்த க்ஷேத்திரத்தின் பெருமை உணர்த்தப்படுகின்றது. சுயம்புநாதனைத் தரிசித்த பிறகே இதற்கு மேற்கிலுள்ள மிஹிர க்ஷேத்திரம் தரிசிக்கத்தக்கது என்றும் அவ்வூர் புராணத்தில் கூறப் படுகிறது.

பரிபாலனம் :

இது திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் தீற்குச் சொந்தமான திருக்கோயில் என்பது முன்னும் சொல்லப் பெற்றிருக்கிறது. இப்போது இவ்வாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானதாக எழுந்தருளி யிருப்ப வர்களும், சமயம், சமூகம், பொதுநலம், பிரசாரம், புத்தக வெளியீடு, பத்திரிகை வெளியீடு, கும்பாபிஷேகம், தமிழ்க்கல்லூரி, வடமொழிக்கல்லூரி, தேவாரபாடசாலை, ஆகமபாடசாலை, உயர்நிலைப்பள்ளி, துவக்கப்பள்ளி ஆகிய பலதுறைகளிலும் பணிகள் பலசெய்து வருபவர் களுமாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இத்தேவஸ்தானத்தை அருளாட்சி புரிந்துவருகிறுர்கள்.

கும்பாபிஷேகம் :

விமானம், இராஜகோபுரம் இவைகளில் சுதைவேலை செய்து வர்ணகலாபங்களிட்டும், கர்ப்பக்கிரகம் அர்த்த மண்டபம், மகாமண்டபம் கருங்கல் தளவரிசை செய்தும் சேங்கல் மதிற்சுவர்கள் பூச்சு பூசியும், சந்நிதிமுன் மண்டபம் புதுப்பித்தும், துவாரபாலகர், துவாரசக்திகள் முதலிய வேலைகள் செய்தும், கிராம தேவதைகளான ஐயனர், பிடாரி, காளியம்மன், மாரியம்மன் மற்றும் ஆலயத்திலுள்ள பரிவார தேவதைகள், சுவாமி, அம்பாள் எல்லா மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தனம் சார்த்தியும், மிக அவசியமான சில இடங்களில் தளவரிசை இட்டும், பழுதுபார்த்துத் திருப்பணி செய்தும், பழம் பெருமை வாய்ந்த இத் திருக்கோவிலுக்கு 29—1—59 குருவாரத்தன்று மகா கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது.

கும்பம் சிவசோரூபம். யாகசாலை 36 தத்துவ சோரூபமானதும், சிவபெருமானது அட்டமூர்த்த வடிவமானதும் ஆகும். மந்திரம், கிரியை, பாவனை மூன்றிலும் வளர்க்கப்படும் அக்னியிலிருந்து எழுகின்ற புகையும், வேத ஒலி, சிவாகம ஒலி, தமிழ்மறை ஒலி, இவற்றுடன் உத்தம மெய்யன்பர்கள் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபித்திருக்கின்ற இறைவனது அருட்சக்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச்செய்யும். அச் சக்தியைத் செலுத்தும் சக்தி வாய்ந்த தருப்பைக் கயிற்றின்வழி அச் சக்தியைப் பிம்பத்தில் சேர்ப்பித்துக் கும்பத்திலுள்ள நீரினல் பிம்பத்திலும், சிகரங்களிலும்

அபிஷேகம் செய்யப்படும். இதுவே கும்பாபிஷேகத் தத்துவம் என்பது இங்கே நினைக்கத்தக்கது.

கோவில் அமைப்பு :

பேரளம் புகைவண்டிநிலையத்திலிருந்து வடகிழக்கே ஊருக்கு நடுவில் நாற்புறமும் பெருமதிலால் சூழப் பெற்று, மேற்கில் கோபுர வாயிலுடன் கூடியது. முதற் பிராகாரத்தில் உற்சவ மண்டபம், யாகசாலே, பரிமார்த்த அறை, அம்பாளுக்குத் தனிக் கோவில், தேவஸ்தான அலுவலகம் உள்ளன. விநாயகர், சுப்ரமண்யர், மகா லக்ஷ்மீ, சனிபகவான், சூரியன், சந்திரன், பேரளமுனிவர் முதலிய மூர்த்திகள் உள்ளன. தென்கிழக்குமூலையில் மடைப்பள்ளி அமைந்துள்ளது.

பூஜை :

காரண காமிக ஆகமங்களின்படி ஐந்து கால பூஜைகள் நடைபெற்றுவருகின்றன.

ஏறுபடி :

வார ஏறுபடி வகையருக்களும் பங்குனி உத்தி ரத்தையொட்டி மகோற்சவமும் நடைபெறுகிறது.

சொத்து :

இத் திருக்கோவிலுக்கு 344. 25 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்கள் இருக்கின்றன.

கும்பாபிஷேகத்தையொட்டி :

கும்பாபிஷேககாலத்தில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்கின்றன. மனம் கனிய வேண்டுமானுல் நல்ல தெய்விகச் சூழ்நிலே இருக்கவேண்டும். சூழ்நிலேயும் மனநிலேயுமே ஆஸ்திக உணர்வையும், தார்மிக சிந்தனே யையும் வளர்க்கமுடியும். அதனுல்தான் நல்லாரிணக்கம் நல்லறிஞரால் போற்றப்பெறுகின்றது. ‘ நல்லாரைக் காண்பதுவும் நன்று ;’ என்று ஔவையாரும் கூறியுள்ளார். ‘ மலிந்தவர் வேடம் ’ என்று சாத்திரம் பேசும். நல்லாரிணக்கத்தை இத்தகைய பெருவிழாக்களால்தான் அடையமுடியும். அன்பு வளரவேண்டுமானுல் இத்தகைய பண்பட்ட மனம் வளர்ந்தாலன்றி இயலாது. பண்பட்ட மனமே முத்திப்பேற்றுக்குச் சிறந்த சாதனம். மனத்தைப் பண்படுத்த திருநாவுக்கரசுப் பெருமானுர் சொல்லும் வழியே சிறந்த வழியாகும். மெய்ம்மை என்ற உழவைச் செய்யவேண்டும். அங்கே விருப்பமென்னும் விதையை வித்த வேண்டும். பொய்ம்மை என்ற களேயைப் போக்க வேண்டும். பொறை என்ற நீரைப் பாய்ச்ச வேண்டும். தம்மையும் நோக்கியபின் தகவு என்ற வேலியிட வேண்டும். செம்மையுள் நின்ருல் சிவகதி தோன்றும். அதுவே சுயம்புலிங்கம். அதன் திருவடியைச் சார்ந்தால்தான் நிலேத்த இன்பம், அமைதி கிடைக்கும். சுயம்புநாதன் திருவடியே பிறவிப் பெருங்கடல் நீந்தவைக்கும் திருவருட் தெப்பம்.

உ

சிவமயம்

தோத்திரப் பாடல்கள்

விநாயகர்

பிடியத னுருவுமை கோளமீகு கரியது
வடிகோடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகோடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.

— சம்பந்தர்,

சிவபெருமான்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

— அப்பர்.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே,

— மணிவாசகர்,

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே,

— திருமாளிகைத்தேவர்.

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகு திருவாரூரில்
மழவிடையாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடியா ரொடுங்கூடி யெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்.

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமேஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்,

— சேக்கிழார்.

பார்வதி

தோடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தேடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

—குமரகுருபரர்,

தனந்தரும் கல்விதரும் ஒருநாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே.

— அபிராமிபட்டர்.

முருகன்

அன்னைசொற்கு ஒருசெவி ஐயர்சொற்கு ஒருசெவி
அம்மான் துதிக்கு ஒருசெவி
ஆனைசொற்கு ஒருசெவி வீரர்சொற்கு ஒருசெவி
அயன் துதிக்கு ஒருசெவி விண்ணோர்

மன்னர்சொற்கு ஒருசெவி வள்ளிசொற்கு ஒருசெவி
வான்வனிதை சொற்கு ஒருசெவி
மறைதுதிக்கு ஒருசெவி அடியர்சொற்கு ஒருசெவி
வல்லசுரர் சொற்கு ஒருசெவி
பன்னிரண்டுங் கொடுத்து என்சொல்கேளாமல்
பராமுகமதா யிருந்தால்
பாவியேன் மெலிவுகுறை எவர்செவியிலேற்றிப்
படுந்துயர் களைந்துகொள்வேன்
முன்னம்மறை நாலும்வந் துன்னு புள்ளூரனே
முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குருவேபால
முத்துக் குமார குருவே.

தென்முகப்பரமன்

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முறுவல் நிலவெறிப்பும்
பொலிசடா டவியும்அதில் உறைநிலா மதியும்ஒளி
புனைகுழை இலங்குகாதும்
தேங்குபர மானந்த சின்மயா காயமாம்
சித்திஅருண் முத்திரையுமேல்
சிவானுபவ நீங்கினோர் சேரஅருள் செபமாலை
சிவஞான புத்தகமும்ஓர்
வேங்கையத ளுடையும் சரற்கால மதிகோடி
வெள்ளம்எனநிறை வடிவமும்
மேலான தெய்வம்நாம் அன்றிவே றில்லைஇது
மெய்யென்று எடுத்தகனலும்
ஓங்கவட ஆலடியில் உறைகின்ற தெய்வமே
உனையன்றி வேறுநினையேன்
ஒன்ருகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

— சிவஞானதேசிக சுவாமிகள்,

கூத்தப்பெருமான்

குனித்த புருவமுங் கோவ்வைச்சேவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபோற் பாதமுங் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

சண்டேசர்

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்துகோண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கோடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட ஞரே.

— அப்பர்.

திருநீற்றின் பெருமை

காண இனியது நீறு கவினைத் தருவதுநீறு
பேணியணிபவர்க் கெல்லாம் பெருமை கோடுப்பதுநீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவதுநீறு
சேணந் தருவது நீறு திருஆலவாயான் திருநீறே

— சம்பந்தர்.

ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பேருந் துணையாவது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 1—50 வெளிநாடு ரூ. 2—00

சேயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல்,

தஞ்சை மாவட்டம்.